உ

சிவமயம்

ஸ்ரீ பூஜாராமாயணம்



அமைப்புரை:

ரா. பத்மநாபன்

வெளியீடு:

ராமனாதன் ஸ்டோர்,

காரைக்குடி.

16—4—1971

உ
சிவமயம்

வாழ்த்துரை.

ஸ்ரீ பூஜாராமாயணம் என்ற இந்நூலை 24 வகையாக இராமநாமத்தின் பெருமையைக் கூறி, பொருத்தமான கவிச்சக்கரவர்த்தியின் கவிகளை அங்கங்கே காட்டி, கம்பர் பெருமானின் சொற்றொடர்களைக் கதைப் பகுதியில், உரைநடையில் மிகுதியும் பெய்து வெளியிட்டுப் புகழ் பெறுபவர் என் மாணுக்கர்; ஈடில்லாத இறையன்பு உடையவர்; நல்ல தமிழ்ப் பற்றுடையவர்; இராமபிரானிடம் தீராக் காதல்

கொண்டவர்; இராம நாமத்தை இரண்டு கோடி முறைக் கையால் எழுதி இன்புற்ற திரு, இராமகிருஷ்ணய்யரின் மைந்தர், ரா. பதுமநாபன் ஆவார்.

அன்பர் பதுமநாபனின் அறத் தொண்டு வாழ்க! வளர்க!

இதனை வெளியிட்டுச் சிறப்புப் பெறும் காரைக்குடி ராமஞுதன் ஸ்டோர் ஜவுளி வியாபாரம், நிறுவனத்தாருக்குப் பாராட்டும் வாழ்த்தும்.

காரைக்குடி.
10-4-1971.

ராய. சொ.

உ
ஸ்ரீ ராமஜெயம்

நூல் முகம்

ஸ்ரீ இராமபிரானின் திருவருள் எவ்வாறு, எங்கே பாலிக்கப் பெறும் என்பதை நம்மால் அறிந்து சொல்லக் கூடுமா? என் ஆசிரியப்பிரான், 'தமிழ்க்கடல்', 'சிவமணி', 'சிவம் பெருக்கும் சீலர்', 'வண்கவிவள்ளல்' ராய. சொ. அவர்களை வழக்கமாகச் சந்திக்கச் சென்ற ஒருநாள், ஸ்ரீ பூஜா இராமாயணம் என்ற இந்நூற் பணியினை எனக்குத் தந்து ஆசி கூறினார்கள். பணியை இட்டதுடன் நில்லாமல், அது சிறப்புறுதற்கு ஆவன அனைத்தும் அவ்வப்போது தந்து உதவினார்கள். வாழ்த்

துரையும் உவகையுடன் வழங்கியுள்ளார்கள். ஸ்ரீ ராமனின் நல் ஆசியும், ஆசிரியப்பிரானின் அன்பு கலந்த ஆசியும் துணைவந்ததின் விளைவே இம் முயற்சி. அன்னோருக்கு என் நன்றி கலந்த வணக்கங்கள்.

ஸ்ரீராமன் என்னும் சக்கரவர்த்தி திருமகனின் காதையைப் பலவாறு படித்து இன்புற்றுப் பயனடைவது நம்மனோர் மரபு. அதோடு அத்தெய்வீக நூலைப் பூசித்துப் புனிதமடைவதும் நம் நாட்டில் தொன்றுதொட்டு வழக்கமாக வந்துள்ளது.

ஸ்ரீராமபிரானின் திருக்கதையைச் சுருக்கமாகவும், அப்பிரானது திரு

நாமங்களை விளித்து, அவன் திரு வடியைப் பூஜிப்பதாக அமையும் வகை யிலும், பாராயணத்திற்கு ஏற்றவாறும் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இருபத்து நான்கு கட்டங்களாக இராமகாதையை விரித்து, கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாடலை ஒவ்வொரு பகுதியின் இறுதி யிலும் தரப்பெற்றுள்ளது.

ஸ்ரீ ராமனின் கதையைப்பரப்பவும், அவனை வழிபடவும் உதவுமாறு நல்லெண்ணத்துடன் இந்நூலை அச்சிட்டு வெளியிடுபவர்கள் காரைக்குடி, ஜவுளி வியாபாரம் ராமனுதன் ஸ்டோர் நிறுவனத்தார்.

அன்னூர்களும், அவர்கள் குடும்பத்தினரும் பல்லாண்டு பல்லாண்டு இன்பம் துய்க்க அறம் தலை நிறுத்தவந்த அண்ணல் திருவருள் புரிவாஞக!

காரைக்குடி,
16—4—71. } ரா. பத்மநாபன்.

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ பூஜா ராமாயணம்

நன்மையும் செல்வமும்
  நாளும் நல்குமே;
தின்மையும் பாவமும்
  சிதைந்து தேயுமே;
சென்மமும் மரணமும்
  இன்றித் தீருமே;
இம்மையே இ'ராம'என்ற
  இரண்டு எழுத்தினால்.

நாடிய பொருள்கை கூடும்;
  ஞானமும் புகழும் உண்டாம்;
வீடியல் வழியது ஆக்கும்;
  வேரிஅம் கமலை நோக்கும்;
நீடிய அரக்கர் சேனை
  நீறுபட்டு அழிய, வாகை
சூடிய சிலைஇ ராமன்
  தோள்வலி கூறு வோர்க்கே.

அஞ்சிலே ஒன்று பெற்ருன்,
அஞ்சிலே ஒன்றைத் தாவி,
அஞ்சிலே ஒன்றுஆ ருக,
ஆரியர்க்கு ஆக ஏகி,
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலார் ஊரில்,
அஞ்சிலே ஒன்றை வைத்தான்;
அவன் நம்மை அளித்துக் காப்பான்.

உலகம் யாவையும்
தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும்,
நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை
யாட்டுடை யார்,அவர்
தலைவர், அன்னவர்க்
கேசரண் நாங்களே.

-கம்பர்

க. பாலகாண்டம்

1. இராமாவதாரம்

திருமகள் கேள்வா! நெடுமாலே! பண்டொரு நாள் உன்னிடம், இந்திரன் முதலான தேவர்கள் பிரமதேவனை முன்னிட்டுக்கொண்டு "எம் பெருமானே! இராவணனாலும், அவனைச் சார்ந்த அரக்கர்களாலும் நாங்கள் படும் இன்னல்களுக்கு அளவேயில்லை; தாங்கமுடியாது தவிக்கிறோம்; தேவரீர்! எங்களை அவற்றினின்றும் காப்பாற்றி அருள வேண்டுகிறோம்" என்று முறையிட்டனர்; எளியோரின் இன்னல் காணப் பொறாத நீ, "தேவர்களே! உங்கள் குறையை விரைவில் நீக்குவேன்; கவலையைவிட்டுச் சென்றுவாருங்கள்" என்று புகல்மொழி அருளினாய்! அதற்கென இப் பூவுலகில் அவதரிக்கவும், அதேசமயம் பரத கண்டத்தின் திலகம் என விளங்கிய, சீரும்

சிறப்பும் பெருகிய அயோத்தி என்னும் அணிநகர் அரசனுன தயரதனுக்கு மகப்பேறில்லாப் பெருங் குறையை அகற்றவும் திருவுளம்கொண்டாய்; அம்மன்னர் மன்னனும் புத்திரகாமேட்டி யாகம் செய்து, அதன் வழிபெற்ற பாயசத்தைத் தன் மனைவிகளான கோசலை, சுமித்திரை, கைகேயி என்ற மூவருக்கும் பகிர்ந்தளித்தான். அதன் பயனுகக் கருப்பமுற்ற அம்மூவரில் கோசலையின் திருவயிற்றில், சித்திரைத் திங்கள், சுக்கில பட்சம், நவமிதிதி, புனர்பூச நட்சத்திரம், கடக லக்கினம் கூடிய நன்னுளில், பரம்பொருளாகிய நீ உலகை உய்விக்கத் திருஅவதாரம் செய்தருளினுய்; அவ்வாறே கைகேயியின் திருவயிற்றில் திருஆழி யின் கூருகப் பரதனும், சுமித்திரையின் திரு வயிற்றில் ஆதிசேடனின் கூருக இலக்குவனும், திருச்சங்கின் கூருக, சத்துருக்கனனும் எனத் திருஅவதரிக்க அருள் பாலித்தாய்; இவ்வாருகத் தயரதன் மகப்பேறில்லா மாபெருங்குறையைத் தவிர்த்தருளிய ‘சந்தான ராமா!’ உன்னை என் மனத்தாமரை கொண்டு பூசிக்கிறேன்.

ஒருபகல் உலகெலாம்
உதரத் துள்பொதிந்து
அருமறைக்கு உணர்வரும்
அவனை, அஞ்சனக்
கருமுகில் கொழுந்துஎழில்
காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள்
திறம்கொள் கோசலை.

2. வேள்வி காத்தல்

கோசலை மணிவயிறு வாய்த்தவனே! நீயும் நின் தம்பியரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தீர்கள். வசிட்ட மாமுனியிடம் கல்விகற்று, எல்லாக் கலைகளிலும் தேர்ச்சியுற்றீர்கள். அயோத்திவாழ் மக்கள் அனைவரின் அன்பையும் பெற்று, திருமண வயதையும் அடைந்தீர்கள். அப்போது விசுவாமித்திரமுனிவர்,

உங்கள் தந்தை தயரதனிடம் தமது வேள்வி காக்க உன்னைக் கேட்டுப் பெற்று, உன் தம்பி இலக்குவனும் கூடவர, உங்களைத் தம்மோடு அழைத்துச்சென்றார். அப்போது இடைவழியில் கொடிய தாடகையை, "சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்" ஒன்றால் நீ அழித்தாய். பின்னர் விசுவாமித்திரர் உங்களை அழைத்துச் செல்கையில், முன்னம் நீ, 'ஓங்கி உலகளந்த' உயர்கதையை உனக்கே உரைத்தார். அம் முனிவரின் வேள்வியை நீயும் இலக்குவனும் 'கண்ணினைக் காக்கின்ற இமையிற்' காத்து, இடையூறாக வந்த அரக்கர்களில், மாரீசன் நீங்கலாக, அனைவரையும் அழித்தீர்கள். இவ்வாறு அறவேள்வி காத்த, 'யக்ஞ ராமா!' உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

எண்ணுதற்கு ஆக்கஅரிது;
இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்கு ஆக்கிய
முனிவன் வேள்வியை

மண்ணினைக் காக்கின்ற
மன்னன் மைந்தர்கள்,
கண்ணினைக் காக்கின்ற
இமையில் காத்தனர்.

3. அகலிகைக்கு அருளல்

வேள்விகாத்த வீரா! விசுவாமித்திரமுனிவர் தமது வேள்வி இனிது முற்றுப்பெற்றபின், உன்னையும் உம்பியையும் 'பெரியகாரியம் உளது' என்று கூறி, மிதிலைநகருக்கு அழைத்துச் சென்றார். அந்நகரின் வெளியிடத்தே உயர்ந்து தோன்றிய ஒரு கருங்கல்லின்மேல் உன் திருவடித்துகள் பட்டவுடன், கோதமமுனியின் சாபத்தால், அங்கு அதுவரை, கல்லாய்க் கிடந்த அவர் மனைவி, அகலிகை, தன் முன்னைய உருவம்கொண்டு எழுந்து நின்றாள். இவ்வாறு 'கால்வண்ணம்' காட்டி, அவ் அன்னையே அனையாளை, நெஞ்சினால் பிழைப்பு இலாளை, கோதமன்பால் இணைத்த "பவித்திர ராமா!" உன்னைப் பக்தியுடன் பூசிக்கின்றேன்.

அஞ்சன வண்ணத் தான்தன்
அடித்துகள் கதுவா முன்னம்,
வஞ்சிபோல் இடையாள் முன்னை
வண்ணத்தள் ஆகி நின்றாள்;
'நெஞ்சினால் பிழைப்புஇ லாளை
நீஅழைத் திடுக' என்னக்
கஞ்சநாள் மலரோன் அன்ன
முனிவனும் கருத்துள் கொண்டான்.

4. சீதை திருமணம்

அகலிகைக்கு அருளிய அருமருந்தே! நீயும் இலக்குவனும் விசுவாமித்திர முனிவரால் மிதிலை வீதிகளில் அழைத்துச் செல்லப்பட்டீர்கள். நகரின் உட்புறச் சிறப்பை யெல்லாம் கண்டு மகிழ்ச்சியுடன் வீதிவழி சென்று கொண்டிருந்தீர்கள். அவ்வமயம் அரண்மனைக் கன்னிமாடத்தின்மேல் நிலையில் நின்று கொண்டிருந்த எண்ணரும்

நலத்தினள் ஆன சீதையின் கண்களும் உன் கண்களும் சந்தித்து ஒன்றை ஒன்று உண்ணவும், இருவரும் இதயம் மாறிப்புகுந்தீர்கள். கருங் கடல் பள்ளியில் கலவி நீங்கிப் பிரிந்த உங்கள் அருங்காதலின் திறம் பேச்சில் அடங்குமா? எனவே இருவரும் காதல் நோயில் உழன்றீர்கள்.

விசுவாமித்திர முனிவர் உன்னையும் இலக்குவனையும் மிதிலை மன்னன் சனகனின் வேள்விச்சாலைக்கு அழைத்துச் சென்றார். உங்களைச் சனகருக்கு அறிமுகம் செய்தார். அப்போது அங்கிருந்த சதானந்த முனிவர், சீதையின் திருமணம், சிவபிரான் வில்லை வளைத்தல் என்ற ஓர் உறுதி மொழியினால் தடைப்பட்டுக் கிடப்பதை வருத்தத்துடன் விவரித்தார். அதைக் கேட்டு கோசிகமுனிவன் தலையசைத்ததை நீ புரிந்துகொண்டு அம்மலை போன்ற வில்லை நோக்கிச்சென்றாய். சீதைக்குச்சூட்டப்போகும் மணமாலை என, அவ்வளவு உற்சாகத்துடனும், எளிதிலும் அவ்வில்லினை எடுத்து, பார்த்தோர் அறியாதவாறு, விரைவாக வளைத்தாய். வில் இற்ற ஓசையையே

அவர்கள் கேட்டனர்! சனகன் மகிழ்ச்சிக்கு அளவேது? பின்னர் நல்லதொரு நாளில், நல்லதொருவேளையில், ஒன்று சேர்தற்குரிய போகமும் யோகமும் போன்ற உன்னையும் சீதாப்பிராட்டியாரையும் சனகராசன் "சீதேவியும் பரம்பொருளும்போல் நிலைபெற்று வாழ்வீர்களாக!" என்று வாழ்த்தி, உன் தாமரைபோன்ற நீண்ட கையில் குளிர்ந்த புண்ணிய நீரை வார்த்து மணமுடித்தான். அந் நன்னாளிலேயே உன் தம்பியருக்கும் திருமணம் நடந்தேறியது. அயோத்தி திரும்புகையில் பரசுராமனின் அகந்தையை அழித்து, அவனிடமிருந்த விட்டுணு வில்லைப்பெற்றுக் கொண்டாய். வேள்வி காக்க வந்து, விரைமலராளான சீதையைத் திருமணம் புரிந்துகொண்ட, 'கல்யாண ராமா!' உன் திருவடிகளைப் பூசிக்கின்றேன்.

கோமகன் முன், சன
கன்குளிர் நன்னீர்,
"பூமக ளும்பொரு
ளும்என நீஎன்

மாமகள் தன்னொடு
மன்னுதி" என்னுத்
தாமரை அன்ன
தடக்கையின் ஈந்தான்.

உ. அயோத்திக் காண்டம்

5. காடுசெல்லல்

அறம்தரு வள்ளால்! நீயும் உன் தம்பியரும் பத்தாண்டு காலம் பாங்குற இல்லறம் நடத்தினீர்கள். தயரத மன்னன் உனக்குத் திருமுடி சூட்டிக் கண்டுகளிக்க ஏற்பாடு செய்தான். அயோத்தி மாநகரம் விழாக்கோலம் பூண்டது. அப்போது கூனி என்னும் கொடியாள் உன் சிற்றன்னை கைகேயியின் தூய மனத்தைக் கெடுத்தாள். அதன் பயனுக உன் தந்தையிடம் கைகேயி தனக்கு முன்னம் அவன் தந்த இரு வரங்களை வேண்டினுள்; அவற்றுள் ஒன்றினுல் தன் மகன் பரதன் நாடாளவும், மற்றொன்றி

ணல் நீ பதினன்கு ஆண்டுகள் காட்டில் 'தாங் கரும்தவம்' மேற்கொண்டு வாழவும் சிறிதும் இரக்கமின்றிக் கேட்டாள். அக்கொடிய சொற் கேட்டுத் திகைத்த வாய்மை மன்னனன தயரதன் கைகேயியிடம் பலவாறு, நீ நாடு இரவாமை நயந்தான். பயனில்லே. இறுதியில் தயரதன் மனம்நொந்து, "ஈந்தேன்! ஈந்தேன்!! இவ்வரம்; என்சேய் வனம் ஆள" என்று கூறி மயக்கமுற்ருன். இந்நிலேயில் சுமந்திரன் வாயிலாக உன்னேக் கைகேயி அழைத்து, மன்னன் கூறியதாக, "கடல் சூழ்ந்த உலகம் எல்லாம் பரதன் ஆளவும், நீ வனம் சென்று சடைமுடி தரித்து இயற்றுதற்கு அரிய தவத்தை மேற்கொண்டு பதினன்கு ஆண்டுகள் கழித்துவா" என்று கூறினுள். எப்பொழுதுமே மலர்ந்த செந்தாமரையை ஒத்திருக்கும் முகத்தினனுகிய நீ, அவ்வாசகம் கேட்டபோது, 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையை வென்ற' முகத்தினன் ஆனுய். 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்ருே' என்று கூறி,

'மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன்; விடையும் கொண்டேன்' என்று அங்கிருந்தே காடுசெல்லத் தயராகிவிட்டாய். பின்னர் தாயான கோசலையை நீ ஒருவண்ணம் தேற்றி, எவ்வளவோ தடுத்தும், 'உன்னைவிட்டுப்பிரிந்திருக்க இயலோம்' என்ற உறுதியில் நின்ற இலக்குவனையும் சீதையையும் உடன் அழைத்துக்கொண்டு, மூவரும் மரவுரி தரித்து, சுமந்திரன் தேர் செலுத்த, அயோத்தி மக்கள் பெருந்துயரில் நைய, காடு செல்லப்புறப்பட்டு விட்டாய். பெருந்தன்மைக் கருவூலமான, 'உதாரகுண ராமா!' உன்னைப் பக்தியுடன் பூசிக்கின்றேன்.

சீரை சுற்றித்
திருமகள் பின்வர,
மூரி வில்கை
இளவன் முன்செல,
காரை ஒத்தவன்
போம்படி கண்டஅவ்
ஊரை உற்றது
உணர்த்தவும் ஒண்ணுமோ?

6. குகநட்பு

மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகும் அழியா அழகுடையாய்! கார் இருளின் நடுவே, நீ கட்டமைந்த வில்லினை எந்தி, சீதை, தம்பி இலக்குவன் தொடர, கங்கைக்கரையை அடைந்தாய். அங்கு முனிவர்களால் அகமகிழ உபசரிக்கப்பட்டீர்கள். அப்போது எண்ணற்ற படகுகளுக்குத் தலைவனான குகன் என்னும் அன்பினன் உன்னைக்கண்டு, கனிவுடன் மண்ணிலே தலைதோய வணங்கினான். அளவற்ற காதலுடன், "தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்திக்கொணர்ந்தேன்" என்று விண்ணப்பித்தான். நீயும், 'அன்பினால் அமைந்த தாயின் அமிழ்தினும் சிறப்புடைத்து' என்றுகூறி முறுவலித்தாய். குகன் உன்னோடு தானும் காட்டில் தொடர்ந்து வருவதாக வற்புறுத்தினான். அவன் ஆழ்ந்த அன்பினுள் அகப்பட்ட நீ, இலக்குவனையும் சீதையையும் உன்னையும் அவனுக்கு உறவுமுறைகூறி, காட்டிலிருந்து

பதினுன்கு ஆண்டுகள் கழிந்து மீளும்வரை, கங்கைக்கரைப் பகுதியை ஆளுமாறு கட்டளை யிட்டாய். அவனும் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டு, உங்களைக் கங்கையைக் கடபித்துச் சித்திரகூடம் செல்ல வழிகூறி விடைபெற்ருன். நீங்களும் அங்கு சென்றீர்கள். ஏழை, ஏதலன், வேடன், என்னுது, குகனையும் தம்பியாக ஏற்றுக் கொண்ட "சௌசீல்யராமா!" உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

துன்புளது எனின்அன்றோ
சுகம்உளது? அதுஅன்றோ
பின்புளது; இடைமன்னும்
பிரிவுஉளது எனஉன்னேல்!
முன்புளெம் ஒருநால்வேம்;
முடிவுளது எனஉன்னு
அன்புள, இனிநாம்,ஓர்
ஐவர்கள் உளராஞேம்.

7. பரதனுக்குப் பாதுகை அளித்தல்

வாய்மையும் மரபும் காத்த காகுத்தா! அயோத்தி மீண்ட சுமந்திரன் "இராமனும் தம்பியும் மிதிலைப் பொன்னும் காட்டினுள் போய் விட்டனர்" என்று சொல்லி முடித்ததுமே தயரதனின் ஆவி பிரிந்தது. மன்னனின் உடலைத் தைலத்தோணியில் இட்டனர். கேகய நாடு சென்றிருந்த பரதனும் சத்துருக்கனனும் மீண்டனர். தந்தையையும் உன்னையும் காணத் துடிதுடித்து வந்த அவனுக்கு இடிமேல் இடிபோல் செய்திகள் கைகேயியால் அறிவிக்கப் பட்டன. அவன் அடைந்த மனத்துயரம் அளவிடற்கரியது. தந்தையாரின் கிரியைகள் கழிந்தபின், அயோத்தி நகரே பின் தொடர, உன்னை அழைத்துவரப் புறப்பட்டுக் கங்கைக் கரையை அடைந்தான். குகனும் அவனும் அன்பால் அணைந்தனர். பரதனின் பண்பு நலத்தால் பெரிதும் ஆட்கொள்ளப் பட்டான் குகன். பின்னர் யாவரும் கங்கையைக்

கடந்து, பரத்துவாச ஆசிரமத்தில் தங்கிவிட்டு நீங்கள் உறையும் இடம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். சேனையின் ஆரவாரம் கண்டு, இலக்குவன் பரதனை ஐயப்பட்டு, ஆத்திரப்பட, நீ அவனைச் சமாதானப்படுத்தினாய். தவக்கோலம் கொண்ட பரதனைக் கண்டு உளம் நைந்தாய். தந்தையாரின் மறைவு கேட்டு மீளாத்துயரில் ஆழ்ந்தீர்கள். அன்புத் தந்தையின் வாய்மையைக் காப்பாற்ற வேண்டிய காரணங்களை நீ நன்கு எடுத்துக்காட்டினாய்; எனவே உன் திருப்பாதுகைகளை, உன் சார்பில், வைத்து அரசு செய்வதாகவும், 'கெடுமுடிந்து நீ திரும்பாவிட்டால் கணமும் உயிர் தரியேன்' என்ற வாக்குறுதியுடனும் பரதன் திரும்பினான். நந்திக்கிராமத்தில் தவநிலையில் அரசு இயற்றினான். தம்பியர்பால் தணியா அன்பு கொண்ட, 'பிராத்ருவத்ஸல ராமா!' உன் பொன்னடியைப் பூசிக்கின்றேன்.

நந்தியம் பதியிடை
நாதன் பாதுகம்
செந்தனிக் கோல்முறை
செலுத்த, சிந்தையால்
இந்தியங் களைஅவித்து
இருத்தல் மேயினன்;
அந்தியும் பகலும்நீர்
அருத கண்ணினன்.

௩. ஆரணிய காண்டம்

8. கர, தூடணர்களை மாய்த்தல்

மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தே! பரதன் சென்ற பின், சித்திர கூடத்திலிருந்து தெற்கு நோக்கிச்சென்று, தண்டகவனம் புகுந்தீர்கள். அப்போது எதிர்ப்பட்ட விராதன் என்ற அரக்கனை அழித்தாய். அவன் பண்டைய உருவம் எய்தி உன்னைப் பலவாறு துதித்தான். அதன் பின் சரவங்கனுக்குக் காட்சி அளிக்க அவனும்

விண்ணுலகு ஏகினன். தண்டகவனத்தில் பத்து ஆண்டுகள் உறைந்தீர்கள். நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்த அகத்திய மாமுனியைக் கண்டு உகந்து, அவன்பால் படைக்கலங்கள் பெற்றுக்கொண்டாய். பலகாவதங்கள் நடந்தபின் உன் தந்தையின் ஆருயிர் நண்பனை சடாயுவைக் கண்டு மகிழ்ந்து, அவனது உதவி யால் பஞ்சவடி அடைந்து அங்கு வசித்தீர்கள். கோதாவரியின் பாங்கர் இயற்கையின் எழில் நல மெல்லாம் கண்ணாரக் கண்டுகளித்தீர்கள் அச் சமயம் இராவணனது குலநாசத்துக்கெனத் தோன்றிய அவன் தங்கை, சூர்ப்பணகை உன்னைப் பார்த்து, காமுற்று, வேண்டி, இறுதியில் தோல்வியுற்ருள். அடுத்தநாள் கற்பின் கனலியான சீதையைக் கவர முயற்சிக்கையில், உன் தம்பி இலக்குவனுல் பற்றப்பெற்று, காதும் மூக்கும், இழக்கப்பெற்ருள். அவளது காவலுக்கு வைக்கப் பட்டிருந்த கரன், தூடணன், திரிசிரா முதலானவர் பதினுலாயிர அரக்கர் படையுடன் உன்னை வளைத்துப்போரிட்டனர். நீ ஒருவனுகவே அவர்கள்

அனைவரையும் அழித்து வெற்றி வாகை சூடினாய். கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனான 'பராக்கிரம ராமா' உன் பொன்னடியைப் பூசிக்கின்றேன்,

மூத்தம் ஒன்றில்
முடிந்தவர் மொய்புண் நீர்
நீத்தம் ஓடி,
நெடுந்திரை நேர்உற,
கோத்த வேலைக்
குரல்என, வானவர்
ஏத்த வீரன்
இனிதிருந் தான் அரோ!

9. சீதையை இழத்தல்

எப்பொருளும் ஈன்றவனே! சூர்ப்பணகை இலங்கை சென்று, தன் அண்ணன் இராவணான் கழலடிகளில் வீழ்ந்து முறையிட்டாள். தங்கை

யின் நிலைகண்டு கடுஞ்சினம் கொண்ட இராவணன் அவளை இங்ஙனம் அவமானப்படுத்தியவர் யார் எனக்கேட்டான். அவளும் நிகழ்ந்தவற்றைக் கூறி, சீதையின் பேரழகை விவரித்தாள். அதைக் கேட்டதுமே சீதைபால் ஆசை கொண்ட இராவணன், தங்கை துயரையும் மறந்தான். சீதையைக் கவரத் தனது மாமன் மாரீசனைப் பொன்மான் உருவில் வஞ்சனையாக ஏவினன். சீதை, தன் எதிரே விளையாடிய பொன்மானின் எழில் நலம்கண்டு, அதைப் பிடித்துத் தனக்குத் தர உன்னை வேண்டி வற்புறுத்தினள். இலக்குவன் மாயமான் என்று எவ்வளவோ எடுத்துரைத்தும் பயனிலாது, நீ மானைத் துரத்திச்சென்றாய். அம் மாயமான் உன்னை வெகு தொலைவில் இழுத்துச் செல்லவே, நீ அதை ஓர் அம்பினால் மாய்க்கையில், அது உனது குரலில் சீதையையும் இலக்குவனையும் சோகத்தால் அழைத்தது. அவ்வொலி கேட்டு மயங்கிய சீதை இலக்குவனைக் கட்டாயப்படுத்தியும் வைதும் உன்னைத் தேட அனுப்பினள். இத்தருணத்தை எதிர்பார்த்திருந்த

இராவணன் சந்நியாசி வடிவில் வந்து, சீதை யைத் தந்திரமாகப் பர்ணசாலேயுடன் கவர்ந்து ஆகாய வீதியில் சென்ருன். இதனேக் கண்ட சடாயு மிகவும் எதிர்த்தான்; முடிவில் சிறகிழக் கப்பட்டுக் கீழே வீழ்ந்தான். இராவணனும் சீதையை அசோக வனத்தில் சிறைவைத்தான். இலக்குவனே இடை வழியில் நீ சந்தித்து ஆவலுடன் பர்ணசாலே நோக்கி வந்தாய். அங்கு அதனேயும் சீதையையும் காணுது தவித்துப் போனுய். சீதையை நாடிச் செல்கையில் சடாயு வின் கதியறிந்து துயரடைந்தாய். விதிவலியால் இராவணன் சீதையை எங்கு கொண்டு வைத் துள்ளான் என்ற உனது கேள்விக்கு விடை சொல்லுமுன், சடாயு உயிர் நீத்துப் பரமபதம் புக்கான். ஆவி அனேய சீதையை, அறம் தலே நிறுத்தவேண்டி, பிரிந்து துயருற்ற 'சீதாராமா!' உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

சீதம்கொள் மலரு ளோனும்
தேவரும் என்பது என்னே?
வேதங்கள் காண்கி லாமை
வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணில் பார்த்தான்;
படிவங்கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியு நாளும்
போக்கிலா உலகம் புக்கான்.

10. சபரி வீடு பேறு

பிறவிப் பிணிதீர் மருந்தே! சீதையை நாடி நீயும் இலக்குவனும் மலைவழிச் செல்கையில் அயோகிமுகி என்னும் அரக்கியை இலக்குவன் தொலைத்தான். அடுத்துக் கவந்தன் தன் மாயப் பிறவி நீக்கப்பெற்றுப் பண்டைய உருவில் உங்களை வாயாரப் போற்றி, சவரிமூலம் சுக்கிரவ நட்புக்கு வழி கூறி மோட்சம் புக்கான். பின்னர் மதங்க முனிவரின் ஆசிரமம் எய்தி, அங்கிருந்து

உன்னையே பன்னெடுங்காலமாக் எதிர்நோக்கி இருந்த சவரி தந்த இன்கனி உவந்து உண்டு, சுக்கிரீவன் வசித்த இரலை மலை வழியை அவள் கூறக்கேட்டீர்கள். உன்னைத் தரிசித்த சவரி வீடுபேறு எய்தினாள். அந்தமில்பேரின்பம் சவரிக்கு நல்கிய "ஆனந்தராமா!" உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

'இருந்தனென், எந்தை! நீஈண்டு
எய்துதி என்னும் தன்மை
பொருந்திட, இன்று தான்என்
புண்ணியம் பூத்தது' என்ற
அருந்தவத்து அரசி தன்னை
அன்புற நோக்கி, 'எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய்,
அம்மனை வாழி!' என்றான்.

௪. கிட்கிந்தா காண்டம்

11. வாலி மோட்சம்

மும்மை ஏழுலகும் காக்கும் முதல்வ! சீதையை நாடி, நீயும் இலக்குவனும் வழி நடந்து பம்பைப் பொய்கையைத் தாண்டியதும் சுக்கிரீவன் மறைந்திருந்த மலையை அடைந்தீர்கள். உங்களைத் தூரத்தில் கண்டவுடன், பகைவர் என அஞ்சி அவன் ஓடி ஒளிந்தான். அவனது மந்திரியும் சொல்லின் செல்வனுமான அனுமன் உங்களைச் சந்தித்து, விபரம் அறிந்து, சுக்கிரீனுடன் நட்புச்செய்வித்தான். தனது அண்ணனை வாலியைக்கொல்ல, சுக்கிரீவன் உன்னிடம் இரந்தான். அவ்வாறே வாலியை உன் தனிச் சரத்தால் வீழ்த்தினுய்; அவனுக்கு இறுதிக் காலத்தில் உன் தெய்வீகக் காட்சி தந்து, வீடுபேறும் அருளினுய். குறித்த தவணைப்படி சுக்கிரீவன், அரசு ஏற்று, மதி மயங்கியதால், உன்னை வந்து சந்திக்காது போகவே, இலக்குவனை அவனிடம் அனுப்பி அவனை வரவழைத்தாய். பின்னர் நால்

திசைகளிலும் சீதையை நாடி வானரர்கள் அனுப்பப்பட்டனர். தென்திசை நோக்கி அங்கதன் தலைமையில் அனுமன் முதலோர் சென்று தேடி, மயேந்திரமலையை அடைந்தனர். தன் திருநாமத்தால் தன்னையே நல்கும் 'மோட்ச பலப்ரத ராமா!' உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

முன்மைசால் உலகுக்கு எல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே எழுமை நோய்க்கு
மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக்
கண்களின் தெரியக் கண்டான்.

12. சம்பாதி சிறகுபெறல்

அருள் பழுத்த பழமே! மயேந்திர மலையில் அங்கதன், அனுமன் முதலோர் சீதையைத் தேடும் தங்கள் முயற்சி வெற்றி பெருததை எண்ணி மிகவும் வருந்தினர். "சடாயு போல் இராமத் தொண்டில் தெய்வ மரணம் எய்தப் பெற்ருேம் இலையே" என வாய்விட்டுப் புலம்பி ஏங்கினர். அதைச் செவியுற்று அங்கு மறைவாக இருந்த சடாயுவின் அண்ணன் சம்பாதி, சிறகிழந்த நிலையில், அவர்கள் அருகே வந்து விசாரித்தான். நடந்தவை அறிந்து வருந்தி, வானரர்களை உன் மெய்த்திருநாமம் ஓதச்செய்து, அதனுல் தன் சிறகுகளை மீண்டும் பெற்ருன். சீதை இலங்கையில் இருப்பதைத் தெரிவித்து விட்டு விண்ணில் பறந்தான். தன் திருநாமத்தால் அனைவரையும் உய்விக்கும் "தாரக நாம ராமா!" உன்னைப் பக்தியுடன் பூசிக்கின்றேன்.

என்ருன்; 'அன்னது
காண்டும் யாம்' எனு
நின்ருர் நின்றுழி,
நீல மேனியான்

நன்றுஆம் நாமம்
நவின்று நல்கினூர்;
வன்தோ ளான்சிறை
வானம் தாயவே.

ரு. சுந்தரகாண்டம்

13. அனுமன் சீதையைக் காணல்

மறைகளுக்கு இறுதியாவாய்! மயேந்திர மலையில் அங்கதன் சாம்பன் முதலோர் இலங்கையை அடையக் கடலைத்தாண்டுவது குறித்துப் பலவாறு ஆலோசித்தனர். இறுதியில் சாம்பன் வாயிலாக அனுமனது எல்லையற்ற ஆற்றல் உந்தப்பட்டதும் அனுமன் பேருருவம் கொண்டு, கடலைக் கடக்க ஆகாய வீதியில் வேகமாகத் தாவிச்சென்ருன். வான வழியில் மைனுக மலையின் அன்பினைக் குறிப்பால் ஏற்று, சுரசை என்னும் தூய தேவமாதின் சோதனையில் வென்று, அங்காரதாரை என்னும் அரக்கியை மாய்த்து, இலங்கைப் பவளமலையில் குதித்தான்.

மிகக் குறுகியவடிவுடன் இலங்கையில் புக, மதிலைத்தாவுகையில், அந்நகரைக் காவல்செய்யும் இலங்கைத்தேவி தடுக்க, அவளை வென்று நகருள் சென்றான். ஏழுநூறு யோசனை சூழ்ந்த அவ் இலங்கை மாநகரில், நள்ளிரவில் அரக்கர் இல்லங்கள், மாளிகைகள் அனைத்திலும் சீதையைத் தேடினான். தொடர்ந்து கும்பகருணன், வீடணன், இந்திரசித்து முதலானோர் மாளிகைகளிலும் தேடி, மண்டோதரியைச் சீதையோ என ஐயுற்று, தெளிந்து, உறங்கிக்கொண்டிருந்த இராவணனைக் கண்டு, சினந்து, ஆறினான். எங்கு தேடியும் திருவுக்கும் திருவான சீதையைக்காணாது அனுமன் ஏங்கி மனம் ஒடிந்து, உன்னை எண்ணியதும், அருகிருந்த அசோகவனம் தென்பட்டது. முயற்சித்துப்பார்ப்போம் என அங்கு சென்று உற்று நோக்கினான். அங்கே, உன்னைப்பிரிந்து சோகத்தரளாகிச் சிறையிருந்து வாடிய சீதையை அரக்கியர் குழாத்தின் நடுவே கண்டான்; மகிழ்ச்சிக்கடலில் திளைத்தான் அனுமன். தொண்டர் உள்ளத்துயர் துடைத்துத் துள்ளச் செய்யும் 'ஸ்ரீராமா' உன் திருவடியைப் பூசிக்கின்றேன்.

'வீடினது அன்றுஅறன்;
யானும் வீகலேன்;
தேடினென் கண்டனென்;
தேவி யேஎனு,
ஆடினன், பாடினன்;
ஆண்டும் ஈண்டும்பாய்ந்து
ஓடினன்; உலாவினன்;
உவகைத் தேன்உண்டான்.

14. கணையாழி கொடுத்தல்

கொண்டல் நிறத்தினுய்! வெம்புலிக் குழாத்திடை அகப்பட்ட இளமான் போன்ற சீதை, வீடணன் மகளான திரிசடையின் தேற்றமொழிகளால் ஒருவாறு ஆறுதல் அடைந்து வந்தாள். எவ்வாறு சீதையைக் கண்டு பேசுவது என்று அனுமன் மரக்கிளையில் மறைந்திருந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான். அப்போது

மிக்க ஆடம்பரமாக இராவணன் சீதை இருக்குமிடம் வந்து, அவளைப் பலவாறு காதல் இரந்தான். சீதை அவனைத் துரும்பெனமதித்து, அவனது தீய எண்ணங்களைப் பழித்து விடை இறுத்தாள். அவற்றைச் செவியுற்ற இராவணன் கடுங்கோபம் கொண்டு, மீண்டும் கெஞ்சினன். பயனிலாது போகவே இருமாதக் கெடு அளித்துச் சினத்தோடு அங்கிருந்து சென்றான். ஆறாத் துயரால் அவதியுற்ற சீதை உன்னை எண்ணி எண்ணி ஏங்கி, இறுதியில் தன்னுயிரை மாய்க்கத் தலைப்படுகையில், அனுமன் உன் பெயர் கூறி மரக்கிளையிலிருந்து, அவள் முன்னர் குதித்தான். பின்னர் அவன் சீதையிடம் உன் நிலையை விவரித்துக்கூறி ஆறுதல் அளித்தான். நீ சொல்லியனுப்பிய அடையாள மொழிகளைக் கூறி, உன் மெய்ப்பேர் தீட்டிய கணையாழியைச் சீதையிடம் ஈந்தான். சீதையின். உளக்களிப்புக்குக் கரை ஏது? துறந்த உயிர் இடை தொடரும் பெயர்ப் பெருமைகொண்ட 'துக்க நாசக ராமா' உன் பொன்னடியைப் பூசிக்கின்றேன்.

'மீட்டும்உரை வேண்டுவன
இல்லை' என மெய்ப்பேர்
தீட்டியது; தீட்டரிய
செய்கையது செவ்வே;
'நீட்டுஇது!' என நேர்ந்தனன்,
எனுநெடிய கையால்
காட்டினன்ஓர் ஆழி; அது
வாள்நுதலி கண்டாள்.

15. அனுமன் மீளல்

ஞானத்தனிக் கொழுந்தே! கணையாழி காட்டிக் கரையிலாக் களிப்புத் தந்த அனுமனை, 'வாழிய! வள்ளலே! இன்றென இருத்தி' என்று சீதை வாயார வாழ்த்தினாள். அவளது ஐயம் நீங்க அனுமன் பேருருக்கொண்டான். மீண்டும் முன்னைய உருக்கொண்டு உனக்கு அவள் அனுப்பும் செய்திகளை வினவினன். சீதையும் தன் மன

வருத்தம் மிகத்தோய்ந்த மொழிகளினால் பலகூறி, 'இன்னும் ஒரு மாதத்தில் இராமன் இங்கு வந்து என்னை மீட்கவில்லையானால் நான் உயிர் விடுவேன்' என்று அவதியிட்டு உன்னிடம் சொல்லச் சொன்னாள். அனுமன் அவளை ஒருவாறு சமாதானம் செய்து, அடையாளமாகச் சூளாமணியைப் பெற்று விடைகொண்டான். பின்னர் இராவணனைச் சந்தித்து நன்மொழி சொல்லும் நோக்கத்தால், அசோக வனத்தை அழித்தான். அதைக் கேள்வியுற்ற இராவணன் போரிட அனுப்பிய கிங்கரர், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள், அக்க குமாரன் ஆகியோரை அவர்களது படையுடன் அனுமன் அழித்தான். இந்திரசித்தன் ஏவிய நான்முகன் படையால் கட்டுண்டு, இழுத்துச் செல்லப்பட்டு இராவணன்முன் சென்றான். அவனுக்கு எவ்வளவோ நல்லுரை சொன்னான். பயனில்லை. மிகக்கோபமுற்ற இராவணன் அனுமன் வாலில் தீயை வைக்க, அதன் துணைகொண்டே இலங்கையை எரித்தான். பின்னர் கடலைத்தாண்டி, தன் வரவை எதிர்பார்த்திருந்த

அங்கதன் முதலானோரை அடைந்தான். கிட்கிந்தையில், சொன்ன கெடு தாண்டியதை எண்ணிச் சோகமுற்று நீ அயருகையில் அனுமன் அங்கு அடைந்து, "கண்டேன் சீதையை" என்று சொல்லியவாறே, தென்திசை நோக்கித் தண்டனிட்டான். உனக்குச் சீதையின் கற்புநிலையை நன்கு விளக்கினான்; அவள் உன்னை எண்ணி அசோக வனத்தில் தவம் இயற்றலையும் எடுத்துக் கூறியபின், அவளிடமிருந்து பெற்று வந்த சூளாமணியை உன் கையில் தந்து, ஒரு வண்ணம் உன்னைத் துயர்க்கடலினின்றும் கரை ஏற்றினான். பிறகு வானரப் படைகளும், தம்பியரும் சூழ நீ பன்னிரண்டு நாட்கள் நடந்து, தென் கடற் கரையை அடைந்தாய். சீதையின் உயிரான 'ரகுராமா' உன் மலரடியைப் பூசிக்கிறேன்.

பைப்பயப் பயந்த காமம்
பரிணமித்து உயர்ந்து பொங்கி,
மெய்உற வெதும்பி, உள்ளம்
மெலிவுறு நிலையை விட்டான்;

ஐயனுக்கு அங்கி முன்னர்
அங்கையால் பற்றும் நங்கை
கைஎனல் ஆயிற்று அன்றே
கைபுக்க மணியின் காட்சி.

சு. யுத்த காண்டம்

16. வீடணன் அடைக்கலம்.

அஞ்சனவண்ணு! வானரப்படைகளுடன் நீ தென்கடற்கரை வந்துள்ளதை அறிந்து, இராவணன் தனது மந்திராலோசனைக் குழுவைக் கூட்டினன். நிலைமையை விளக்கி, அவர்களது எண்ணத்தைக் கேட்டான். படைத்தலைவர்கள் பலவாறு பேசினர். கும்பகருணன் அண்ணனது தவற்றினைச் சுட்டிக்காட்டினன். ஆயினும் முழுப் படையுடன் உன்னை எதிர்க்கவேண்டும் என்று சொன்னன். இந்திரசித்து, தானே போய் உங்களுடன் போரிடுவதாக முழக்கமிட்டான். அதை, மேதாவிகளுக்கெல்லாம் மேலான மேன்மையாளனுன, வீடணன் தடுத்து, இராமனுகி

அவதரித்த உன்பரம்பொருள் பெருமையை நன்கு எடுத்துக்காட்டினுன். அதோடு இராவணனினும் பேராற்றல் படைத்திருந்த இரணியன் என்பான், அகந்தையால் அழிந்த வரலாற்றினையும் விரித்து உரைத்தான். மேலும் சீதையை உன்னிடம் ஒப்படைத்து, நல்வாழ்வு வாழலாம் எனவும் வேண்டினுன். செருக்குற்றிருந்த இராவணன், வீடணன் அறிவுரைகளைச் சிறுபிள்ளைப் பேச்சுஎன ஏளனம் செய்து, "என் கண்முன் நில்லாது ஓடிப்போ" எனக்கோபித்தான். வேறுவழியின்றி, மறந்தும் நல்புகழ் அன்றி வேறு வேண்டாத வீடணன், மனம் வருந்தி, அறம் தலைநின்ற உன்னிடம் சரண்புக, அமைச்சர் நால்வருடன் நீ இருக்குமிடம் வான்வழி வந்தான். அவனை வானரவீரர்கள் ஐயுற்று வளைத்தனர். பின்னர் மயிந்தன் உனக்கு விவரம் அறிவிக்க, வீடணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ள, அங்கிருந்தோர் கருத்தினைக் கேட்டாய். அனுமனைத் தவிர ஏனையோர் ஏற்கக்கூடாது எனக் கூறினர். வீடணனை ஏற்கத்தகும் என, அதற்குறிய காரணங்களை

அனுமன் விளக்கிறுன். நீயும் அடைக்கலம் என்பதன் சிறப்பினை விளக்கி, வீடணனிடம் சுக்கிரீவனை அனுப்பி, அழைத்து வரச் செய்தாய். வீடணனும் பரவசப்பட்டு வந்து, உன் பொன்னடிகளில் சரணடைந்தான். நீ அவனுக்கு அபயம் அருளி, தம்பியாக ஏற்று, "இலங்கைச் செல்வம் நின்னதே" என இயம்பி, இலக்குவனை அவனுக்கு முடிசூட்டச் செய்து மகிழ்ந்தாய். தருமமும் வாய்விட்டு வெற்றி முழக்கம் செய்தது. "அபயம்" என்று அண்டினேரை ஆதரிக்கும், 'சரணுகதரட்சகராமா' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

குகனெடும் ஐவர் ஆனேம்
முன்பு;பின் குன்று சூழ்வான்
மகனெடும் அறுவர் ஆனேம்;
எம்உழை அன்பின் வந்த,

அகன்அமர் காதல் ஐய!
நின்ஞெடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை.

17. சேது அமைத்தல்

ஆண்டநாயகா! வீடணனை அடைக்கலமாக ஏற்றபின் அவன் வாயிலாக, இராவணுதி அரக்கர்கள், அவர்களின் படைபலம், இலங்கையின் அரண் அமைப்பு முதலியவை குறித்து அறிந்து கொண்டாய். கடலைத்தாண்ட, அணை கட்ட, கடல் அரசனை விரதம் பூண்டு வேண்டியும் அவன் வாராதிருக்க, சினம்மிக்குக் கடலின்மேல் அம்பை விடுத்தாய். அம்பின் கடுமை தாங்காது, வெகுதொலைவில் இருந்த கடலரசன் விரைந்து வந்து உன் திருவடிகூடி, மன்னிப்பு இரந்தான். நீயும் சினம்தணிந்தாய். கடல்மீது அணை அமைப்பின் அதனைத்தான் தாங்கி நிற்பதாகக்

கடலரசன் கூறி விடைபெற்ருன். அவ்வாறே நளன் என்னும் வானரத் தலைவன் மேற்பார்வையில் கடல்மேல் அணை நன்கு கட்டப்பெற்றது. சேனையரும், தம்பியரும் சூழ, நீ அணைமேல் சென்று, கடலைத் தாண்டி இலங்கைக் கரையை அடைந்தாய். பிறவிப் பெருங்கடல் தாண்டு பேரணையான, 'சேதுராமா!' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

நெற்றியில் அரக்கர்பதி
செல்ல,நிறை நன்னூல்
கற்றுணரும் மாருதி
கடைக்குழை வர,தன்
வெற்றிபுனை தம்பிஒரு
பின்புசெல வீரப்
பொன்திரள் புயக்கரு
நிறக்களிறு போனுன்.

18. இராவணன் தோல்வி

போர்த்தொழில் குமர! இராவணன் தன் அரண்மனைக் கோபுரத்திலிருந்து உன்னையும், உன் சேனையையும் கண்ணுற்று நின்றதைக் கவனித்த சுக்கிரீவன், உணர்ச்சிவயப்பட்டு, அவன் மேல் பாய்ந்து கைகலந்தான். சுக்கிரீவனைக் காணுது நீ இரங்கியபோது, அவன் இராவணனது மகுடமணிகளைப் பறித்து மீண்டான். போர் மூள்வதைத் தடுக்க நீ அங்கதனைத் தூதனுப்பினுய். அதுவும் தோல்வியுறவே முதற்போர் மூண்டது. அரக்கர் சேனையும் வானர சேனையும் மோதிக்கொண்டன. அரக்கர் சேனைகளும் தலைவர்களும் அழியவே, இராவணனே போர்க்களம் புகுந்தான். அனுமனைச் சலிக்கச் செய்து, இலக்குவன்மேல் வேல்படை விட்டு அயரச் செய்தான். பின்னர் அவனைத் தூக்கிச் செல்ல முற்படுகையில், அனுமன் இலக்குவனை எடுத்துச் சென்ருன். உனக்கும் இராவணனுக்கும் போர் நடந்தது. அருந்தவர் ஆசியுடன் இராவணனது படைகளை அழித்தாய். அதனுல் இராவணன்

கோபமுற்றுப் பொருதான். இறுதியில் மகுடம் இழந்து, வலிகுன்றி, நாணி நின்முன் இராவணன். நீ அவனுக்கு அறிவுரை கூறி, 'இன்றுபோய் நாளை வா' எனப் போக விடையளித்தாய். பகைவரிடமும் பரிவுகாட்டும் 'கருணாகர ராமா!' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

ஆள யாஉனக்கு அமைந்தன!
மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை;
'இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா'என நல்கினன்,
நாகுஇளங் கமுகின்
வாளை தாவுறு கோசல
நாடுடை வள்ளல்.

19. நாகபாசம்

புனத்துழாய் மாலையாய்! போர்க்களத்திலிருந்து மிக்க அவமானத்துடன் தன் அரண்மனை புக்கான் இராவணன். அவனது ஏவலால் அவனது தம்பி கும்பகருணன் உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்டு, போர்க்கோலம் புனையப்பட்டான். நிலைமையை அறிந்த கும்பகருணன் இராவணனிடம் அனுதாபப்பட்டுச் சில அறிவுரை கூறி, போர்க்களம் அடைந்தான். நீ அவன்பால் வீடணனை அனுப்பி, அவனை உன் கட்சிக்கு வரச்செய்த முயற்சி தோல்வியுற்றது. பின்னர் கும்பகருணன் அமர் செய்யத்தொடங்கினான். சுக்கிரீவன், அனுமன் முதலோர் அவன் போர்த் திறத்திற்கு ஆற்றாராயினர். அவன் படை முழுவதும் உன்னால் அழிக்கப்பட்டது. தனிநின்ற கும்பகருணன் உன்னுடன் பெரும்போர் புரிந்து மாண்டான். அதன்பின் அதிகாயனை இலக்குவன் மாய்த்தான். செய்தி அறிந்த இந்திரசித்து போர்க்களம் வந்து இலக்குவனைத் தாக்கினான். நீண்ட போருக்குப்பின் இலக்குவனால் முறியடிக்

கப்பட்ட இந்திரசித்து, நாகபாசம் விடும் நோக்கத்துடன் ஆகாயத்தில் மறைந்தான். போர் ஒழிந்திருந்த இலக்குவன் முதலோர் மேல் நாக பாசம் விட்டுக்கட்டி மயங்கச் செய்தான். மயங்கிக்கிடந்த இலக்குவனைக்கண்டு நீ வருந்தி வாய்விட்டுப் புலம்பினுய். அச்சமயம் கருடன் வரவே நாகபாசம் நீங்கிற்று. அனைவரும் எழுந்தனர். கருடன் உன் அடிபணிந்து, உன்னைத் தேற்றி, மிகவாத் துதித்தான். பாசமாம் பற்று அறுக்கும் 'பத்தமோசன ராமா!' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

பேர்ஆயி ரங்கள் உடையாய், பிறந்த
பொருள்தோறும் நிற்றி பிரியாய்;
தீராய்; பிரிந்து திரிவாய்; திறம்தொறு
அவைதேறும் என்று தெளியாய்;

கூர்ஆழி அம்கை உடையாய், திரண்டுஓர்
உருஆதி; கோடல் உரிபோல்
ஆராயின், ஏதும் இலையாதி; ஆர்,இவ்
அதிரேக மாயை அறிவார்?

20. நான்முகன் படைநீக்கம்

எழுது கீர்த்தியாய்! இராவணன் தனது படைத்தலைவர்களைப் போரிட அனுப்பினான். அவர்களனைவரையும் இலக்குவன் கொன்றான். கரன் மகனாகிய மகரக்கண்ணன் போரிட்டு மாண்டபின், இராவணன் இந்திரசித்தை மீண்டும் அமர்க்களம் அனுப்பினான். இலக்குவனுடன் போர் புரிந்து, ஆற்றாது, இலங்கை மீண்டான். மகோதரனைப் பெருஞ்சேனையுடன் போருக்கு அனுப்பினான். அவன் வானரத்தலைவர்களையும் இலக்குவனையும் பல திசைகளில் பிரித்தான். அச்சமயம் இந்திரசித்து, வானில் வந்து, மறைந்திருந்து பிரம்மாத்திரத்தினால் இலக்குவன் முதலா

ஞரைக் கட்டி நினைவிழக்கச் செய்தான். விபரம் அறிந்த நீ, நொந்து புலம்பி அறிவுசோர்ந்தாய். அவ்வேளையில் சீதையை விமானத்தில் ஏற்றி அவளுக்குப் போர்க்களம் காட்டவே, அவளும் பெரும்துயரில் மூழ்கினுள். சாம்பனுல் தூண்டப் பட்ட அனுமன் மருத்துமலை கொணர்ந்தான். அதன் காற்றுப்படவே அனைவரும் உயிர்பெற்று எழுந்தனர். நன்றிப்பெருக்கோடு நீ அனுமனைத் தழுவி வாழ்த்தினுய். தேவர்கள் உன்னைத் துதித்தனர். மானுடச் சட்டைதரித்த "மாயா மானுஷராமா!" உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

உன்னை உள்ள படிஅறியோம்;
உலகை உள்ள திறம்உள்ளோம்;
பின்னை அறியோம்; முன்அறியோம்;
இடையும் அறியோம்; பிறழாமல்
நின்னை வணங்கி, நீவகுத்த
நெறியில் நிற்கும் இதுஅல்லால்
என்னை, அடியோம் செயற்பால?
இன்ப துன்பம் இல்லோனே!

21. இராவண வதம்

விண்ணோர் நாயக! அயன் படையால் தம் பகை ஒழிந்தது என உவந்த இராவணனது செவியில் வானரர்கள் ஆர்த்த ஓசை கேட்டு ஒற்றர்கள் மூலம் செய்தி அறிந்தான். மாயா சீதையை இந்திரசித்து போர்க்களம் கொண்டு போய், அனுமன் முன் அவளை வாளால் வெட்டி, அயோத்தி போவதாகக் கூறி, நிகும்பலையில் வேள்வி புரியப் போனான். சீதை இறந்தனள் என எண்ணி நீங்கள் அனைவரும் அவல நிலை யுற்றீர்கள். இந்திரசித்தன் செயல் மாயையாய் இருக்கக்கூடும் என வீடணன் ஐயுற்று, வண்டாகிச் சென்று மீண்டு, சீதை நன்னிலையில் உள்ளாள் எனத் தெரிவித்தான். இலக்குவனும் வீடணனைத் துணைகொண்டு நிகும்பலை சென்று வேள்வியை அழித்து, இந்திரசித்தையும் கடும்போரிட்டுத் தொலைத்தான். இராவணன் புத்திரசோகம் முற்றி, ஆறி, மூலபலத்தை ஏவினான். நீ ஒருவனாகவே அமரிட்டு மூலபல முழுமையையும் வென்று வாகை சூடினாய்.

இராவணன் தேரேறிப் போர் புரிய வந்தான். இந்திரன் உதவியதேரில் நீ ஏறிஇராவணனுடன் போரிட்டாய். கடுமையாகப்போரிட்ட இராவணனை உன் புனித வாளியால் தொலைத்தாய். தீயோர் இறந்துவிழ வில்வலி காட்டிய "ஜயராமா" உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
 பெருந்தவமும், முதல்வன் முன்னாள்
'எக்கோடி யாராலும் வெலப்படாய்'
 எனக்கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
 புயவலியும் தின்று, மார்பில்
புக்கு,ஓடி உயிர்பருகி, புறம்போயிற்று
 இராகவன்தன் புனித வாளி.

22. சீதை தீக்குளித்தல்

தேவாதிதேவ! இராவணன் மனைவி மண்டோதரி தன் கணவன் மாண்டு கிடந்த போர்க்களம் வந்து புலம்பி, அவன் உடலைத் தழுவி உயிர் நீத்தாள்; அவளை யாவரும் புகழ்ந்தனர். வீடணன் ஈமக்கடன் இயற்றினன். அவனுக்கு ஆறுதல் கூறி, இலங்கை அரியணையில் அவனை அமரச் செய்தாய். சீதைக்கு அனுமன் வெற்றிச் செய்தி தெரிவித்து அவளை மகிழ்வித்தான். உன் கட்டளைப்படி வீடணன் சீதையை அலங்கரிக்கச் செய்து உன்பால் அழைத்து வந்தான். தூரத்திலிருந்தே உன் திருமேனியைக் கண்டு அருகே வந்தபின் உன்னைத்தொழுது புளகித்து ஏக்கம் தவிர்ந்தாள். அந்தநிலையில் நீ சீதையைச் சினக்குறிப்புடன் நோக்கி, இலங்கையில் அவள் இருந்ததை வெறுத்துப்பேசினுய். அங்கிருந்தோர் மனம் தாளாது வாய்திறந்து அரற்றினர். துயர்க் கடலில் மூழ்கிய சீதை, இலக்குவனைத் தீ அமைக்கச் செய்தாள். தாமரைத்தடாகத்தில்

அன்னம் பாய்வதுபோல் தீயில் பாய்ந்தாள் சீதை. அவளது கற்புக்கனலின் வெம்மை தாங்காது, அவளை அக்கினி ஏந்தி, உன்முன் வைத்து முறையிட்டான். உன் உண்மை நிலையைப் பிரமன் உணர்த்திப் போற்றினன். தயரதன் பூதலம் வந்து உங்களை வாழ்த்தி, நீ வேண்டியபடி கைகேயியையும், பரதனையும் உறவு முறையாக ஏற்றுக்கொண்டு துறக்கம் மீண்டான். தேவர்கள் ஆசியால் இறந்த குரங்குகள் உயிர் பெற்று எழுந்தன. கற்பினுக்கு அரசியான சீதையின் மாண்பை உலகறியச் செய்த 'ஜானகிராமா' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

மன்னர் தொல்குலத்து அவதரித்-
-தனை;ஒரு மனிதன்
என்ன உன்னலை உன்னை,நீ,
இராம!கேள் இதனை;

சொன்ன நான்மறை முடிவினில்

துணிந்தமெய்த் துணிவு

நின்அ லாதுஇல்லே, நின்னின்வேறு

உளதுஇலே; நெடியோய்!

23. அயோத்தி மீளல்

இலங்கை செற்ற எம்மானே! வீடணன் கொண்டுவந்த புட்பகவிமானத்தில், நீ, சீதை, இலக்குவன், சுக்கிரீவன், வீடணன், அனுமன் ஏனையோர் சூழ இலங்கையினின்றும் அயோத்தி புறப்பட்டாய். வழியிலுள்ள காட்சிகளையெல் லாம் சீதைக்குக் காட்டினுய், வானர மகளிரையும் கிட்கிந்தையில் சேர்த்துக்கொண்டு, பரத்து வாசன் ஆசிரமம் அடைந்தாய். அவதி தாண்டி விட்டால் பரதன் மாண்டுபோவன் என அவனிடம் அனுமனே முன்கூட்டி அனுப்பி, அவன் தீக் குளிக்க இருந்ததைத் தவிர்த்தாய். அனுமனும்

உன் மோதிரம் காட்டிப் பரதனை உவகைக்கடலுள் ஆழ்த்தினன். நீயும் நந்திக்கிராமம் அடைந் தாய். பரதனை அன்புறத் தழுவி மகிழ்ந்தாய். பரதசத்துருக்கனர்களைத் துணைவர்களுக்கு அறி முகப் படுத்தியபின் அயோத்தி மீண்டாய். தேவரும் முனிவரும் மலர் மழை பொழிந்தனர். மக்கள் பரவசப்பட்டனர். உன் முடிசூட்டு நாளும் குறிக்கப்பெற்று, எங்கும் செய்தி அனுப்பப் பட்டது. அவ்அளவில் மூவுலகத்தோரும் அயோத்தியில் குழுமினர். அறம் நிலைநிறுத்திய 'அயோத்தியா ராம!' உன் திருவடியைப் பூசிக் கிறேன்.

தாயருக்கு அன்று சார்ந்த
கன்றெனும் தகையன் ஆனான்;
மாயையில் பிரிந்தோர்க்கு எல்லாம்
மனேலயம் வந்தது ஒத்தான்;

ஆய்இழை யார்க்குக் கண்ணுள்
 ஆடுஇரும் பாவை ஆனுன்;
ஓய்உறுத்து உலர்ந்த யாக்கைக்கு
 உயிர்புகுந் தனையது ஒத்தான்.

24. முடி சூடல்

பாற்கடல் பள்ளியாய்! பிரமன் ஏவலால் மயன் முடிசூட்டு மண்டபம் அமைத்தான். எல்லோர் இடரும் தீர மருந்துதந்த அனுமன் ஏழ் கடல் நீரும் கொணர்ந்தான். வசிட்டன் மந்திர வினைகள் புரிய, சுமந்திரன் மற்ற மந்திரிகளோடு விரைவாக வேண்டியவை அனைத்தையும் செய்தான். நல்லதொரு வேளையில் அனுமன் உன் திருவடி தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த, பரதன் வெண்குடை கவிக்க, இலக்குவனும் சத்துருக்கனும் வெண்சாமரம் வீச, திருமகளான சீதை அருகிருக்க, கொடைவள்ளல் சடையப்பனின் குலத்தோன் திருமுடியைக் கொடுக்க, வசிட்டமுனிவன் அதை வாங்கி, உனக்குச் சூட்டினன். இதனைக் கண்டோர் அனைவரும்

தாம் தாம் முடி சூடியதாகவே கருதி, உவகை யடைந்தனர். எவ்வுலகத்தோரும் உன்னை 'எம்பெருமான்' என ஏத்தி வணங்கி ஏவல் செய்தார். தருமம் கைதர உன் தம்பி யருடன் நீ இவ்வுலகை அறவழியில் அரசாண்டாய். பாற்கடல் பள்ளி நீங்கி அயோத்தி வந்து ஆண்ட 'பட்டாபிராமா!' உன் திருவடியைப் பூசிக்கிறேன்.

அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த,
பரதன்வெண் குடைக விக்க,
இருவரும் கவரி பற்ற,
விரிகடல் உலகம் ஏத்தும்
வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான், மௌலி.

உம்பரோடு இம்பர் காறும்
உலகமோர் ஏழும் ஏழும்
'எம்பெரு மான்'என்று ஏத்தி,
இறைஞ்சிநின்று ஏவல் செய்யத்
தம்பிய ரோடும், தானும்
தருமமும் தரணி காத்தான்;
அம்பரத்து அனந்தர் நீங்கி
அயோத்தியில் வந்த வள்ளல்.

இராவணனிடம் அனுமன் கூறுதல்

மூலமும் நடுவும் ஈறும்
  இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த
  காரணன், கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும்
  கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
  பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

அறம்தலை நிறுத்தி, வேதம்
  அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம்தெரிந்து, உலகம் பூணச்
  செந்நெறிச் செலுத்தி, தீயோர்
இறந்துஉக நூறி, தக்கோர்
  இடர்துடைத்து, ஏக, ஈண்டுப்
பிறந்தனன், தன்பொற் பாதம்
  ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.

—கம்பர்.

கடவுள் வாழ்த்து

வான் நின்று இழிந்து, வரம்புஇகந்த
மாபூ தத்தின் வைப்புஎங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறமும் உளன்என்ப;
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக் கோல்துறந்து,
கானும் கடலும் கடந்து,இமையோர்
இடுக்கண் தீர்த்த கழல்வேந்தை.

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவுஎன, பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம்,
கலங்குவது எவரைக் கண்டால்?
அவர்என்ப, கையில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே,
மறைகளுக்கு இறுதி ஆவார்;

— கம்பர்.

அச்சிட்டோர்: திருமகள் அச்சகம். காரைக்குடி.

போன்: 313.